OS No.393/2018

DW–1 –புஷ்பா

த/பெ.

நாள். 20.11.2025

<u>பிரதிவாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

1.தாவா சொத்தினை காலியிடமாக தான் நான் வாங்கினேன் என்றால் ஆமாம். அதற்குப் பின்பு தான் வீடு கட்டினேன். அது 04.03.2015 அன்று கிரையம் வாங்கியது. தாவா சொத்தின் கிரைய பத்திரத்தில் தாவாசொத்தின் ஒரு லட்சத்து 67 ஆயிரத்து 500 க்கு வாங்கியதாகத்தான் கிரையம் போடப்பட்டிருக்கிறது. 04.02.2004–தேதியில் நான் கருப்புசாமி உடன் கிரைய ஒப்பந்தம் ஒன்று போட்டேன் என்றால் அடமானம் எல்லாம் வைத்திருக்கிறேன் காட்டப்படும் வாசாஆ–1 இருக்கும் கையெழுத்து என்னுடையதுதான்.

2.சார் பதிவாளர் அலுவலகத்தில் விசாரித்து பதிவு செய்தார்கள் என்றால் ஆமாம். பதிவு செய்த போது சார் பதிவாளர் இடம் கடனுக்கு அடமானம் என்று தான் சொன்னேன். உண்மையில் அப்படி சொல்லி இருந்தேன் என்றால் சார் பதிவாளர் பத்திரமே பதிவு செய்திருக்க மாட்டார் என்றும் சொன்னால் சரியல்ல.

3.வட்டிக்கு பணம் வாங்கியதாக நான் சொன்ன போதிலும் என்னுடைய வழக்கிலும் சாட்சியத்திலும் கடன் வாங்கியதாகவும் அதற்கு வட்டி கட்ட வேண்டியதாகவோ நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வட்டியை பற்றி சொல்லி இருக்கிறேன். வட்டி கட்டியதற்கு என்ன ஆதாரம் என்று கேட்டால் ஆதாரம் எதுவும் கிடையாது. வட்டி எதுவும் நான் கொடுக்கவில்லை என்றும் சொத்தை கிரயம் கொடுத்துவிட்டு தற்போது கடனுக்காக தான் கொடுத்தேன் என்று பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. வட்டி ஏதும் கொடுக்காமல் வட்டி கொடுத்ததாக பொய் வழக்கு அடைகிறேன் என்றால் சரியல்ல.

4. பிரதிவாதியிடம் மூன்று லட்சம் ரூபாய் பணம் வாங்கி இருக்கிறேன். **வாசாஆ–3 மற்றும் 4** உள்ள விலாசம் சரிதான். எனக்கு ரெண்டு விலாசத்திலும்

நோட்டீஸ் வந்தபோதிலும் நான் நோட்டீசை வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நோட்டீசை பெற்றுக் கொண்டேன் அதற்கு பதிலும் கொடுத்தேன். ஒரு நோட்டீசை பெற்றுக் கொண்டேன் என்ற போதிலும் அதுதான் **வாசாஆ–4.** ஆனால் அதற்கு பதில் அறிவிக்கும் நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த பதில் அறிவிப்பை நீதிமன்றத்தில் ஆவண படுத்தவில்லை.

5.**பிவாசாஆ–1** வரைபடம் மட்டுமே நான் வாங்கி இருக்கிறேன் ஒன்றும் அதற்கான பத்திரம் எதுவும் நான் வாங்கவில்லை என்று சொன்னால் எல்லாம் வாங்கி இருக்கிறேன். இந்த வழக்கத்திற்கு பின்னிட்டு ஒரு சின்ன ரூமை போன்று கட்டி அதற்கு மின்சார கட்டணம். குடிநீர் கட்டணம் மற்றும் நிலவரி ரசீது செலுத்தி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கட்டியிருக்கும் மின்சார கட்டணம் குடிநீர் ரசீது இது மற்றும் நில வரி ரசீது ஆகியவை தாவாவுக்கு பின்னிட்டவை என்றும் சொன்னால் சரியில்லை.

6.வாதி செங்கப்பள்ளியில் குடியிருக்கிறார் என்றால் ஆமாம். தாவா சொத்திருக்கும் வாதி குடியிருக்கும் இடத்திற்கும் இடையே 10 கிலோமீட்டர் தூரம் இருக்கும். தாவா சொத்தில் நான் வீடு கட்டி இருக்கும் விவரமே வாதிக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. ஒப்பந்தம் போடும்போது தாவா சொத்து காலியிடமாக தான் இருந்தது என்றும் சொன்னால் சரியல்ல. காலி இடத்தை பார்த்து தான் ஒப்பந்தம் செய்து கிரையம் பேசி முடித்தார்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

7.பிவாசாஆ–1–4 வரை ரசீதுகள், மின் கட்டண ரசீது தாவாவிற்கு பின் இட்டது என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தினை நாலு லட்சத்திற்கு கிரயம் பேசிவிட்டு முன்பாக மூன்று லட்சமும் வாங்கிவிட்டு தற்போது பொய்யாக இந்த வழக்கு தொடர்ந்து இருக்கிறேன் என்று சொன்னால் சரி அல்ல. கால கெடுவம் நான் கேட்ட மாதிரி தான் நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாதி கிரயம் செய்து கொள்ள தயாராக இருந்த போதிலும் நான் தான் கிரயம் செய்து கொடுக்க வரவில்லை என்று சொன்னால் சரியல்ல.

8. வாதி வழக்கறிவிப்பும் அனுப்பி இருக்கிறார் என்றும் இதயத்திற்கு வர சொல்லிக் கூப்பிட்டு இருக்கிறார் இருந்தபோதிலும் நான் தான் கிரயம் செய்து கொடுத்த தயாராக இல்லை என்றும் சொன்னால் சரியில்ல. கிரயம் செய்து கொடுப்பதாக ஒப்பந்தம் எழுதிக் கொடுத்துவிட்டு தற்போது பொய் வழக்கு அடைகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி வழக்கு அனுமதிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

V.SREE VIDYA
DN: cn=V.SREE VIDYA, ou=Judicial Officer, o=Principal Subordinate Judge,, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.